

# விழிப்பாக இருங்கள்!

**உண்மைச் சொத்துக் கொடுக்கல்வாங்கல்கள், பணம் தூயதாக்குபவர்கள் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பவர்கள் பற்றி உன்னிப்பாக கண்காணிக்கப்படுவதில் முன்னிலையில் காணப்படுகின்றன.**

**உங்களது உண்மைச் சொத்து வியாபாரத்தின் நற்பெயரை கலங்கப்படுத்துவதற்கு அவற்றுக்காக இடமளிக்க வேண்டாம்.**

## பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளிலிருந்து எனது வியாபாரத்தினைப் பாதுகாத்துக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?



உங்களது நிறுவனத்திற்கென இணங்குவித்தல் அலுவலர்** ஒருவரை நியமித்து அத்தகைய நியமனத்தினை நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளருக்கு அறிவிக்கவும். நிதியியல் உளவறிதல் பிரிவு என்பது இலங்கையில் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத நிதியளித்தல் பற்றிய நிதியியல் புலனாய்வுத் தகவல்களைப் பெற்று, பகுப்பாய்வு செய்து பரப்புகின்ற தேசிய முகவராண்மையாகும்.

உண்மைச் சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பில் வாடிக்கையாளர்களுடன் நீங்கள் கொடுக்கல்வாங்கல்களைச் செய்யும் போது வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனத்தினை** மேற்கொள்வதன் மூலம் வாடிக்கையாளரை அத்துடன்/ அல்லது பயன்பெறு சொந்தக்காரரை அடையாளம் கண்டு சரிபார்த்தல்.

குறித்த உண்மைச் சொத்துக் கொடுக்கல்வாங்கல், பணம் தூயதாக்கலுடன் அல்லது பயங்காரவாத நிதியளித்தலுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என சந்தேகிப்பதற்கு ஏதேனும் நியாயமான காரணம் உங்களிடம் இருப்பின், உங்களது சந்தேகத்தினை உடனடியாக நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவிக்கவும். சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் பற்றி அறிவிப்பதற்கு “அட்டவணை V*** ஐப் பயன்படுத்தவும்.

சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை இனங்காண்பதற்கு உங்களது அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்க நிதியியல் உளவறிதல் பிரிவு உதவும்.

**இலங்கையில் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை இனங்கண்டு கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்கும் நிதியியல் உளவறிதல் பிரிவுடன் கைகோர்ப்போம்.**

* “இணங்குவித்தல் அலுவலர் பிரகடனப் படிவம்” ஊடாக நியமனமொன்றை மேற்கொள்ளுதல்

** 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் தொழில் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்) விதிகளில் குறித்துரைக்கப்பட்ட வாடிக்கையாளர் உரியவிழிப்புக் கவன வழிமுறைகளை மேற்கொள்ளல்.

*** 2017ஆம் ஆண்டின் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் (படிவம்) ஒழுங்குவிதிகளின் “அட்டவணை V ஊடாக சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல்.

இணங்குவித்தல் அலுவலர் பிரகடனப் படிவம், வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகள் மற்றும் “அட்டவணை V” என்பனவற்றை **www.fiusrilanka.gov.lk** என்ற வெப்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யமுடியும்.


பணிப்பாளர்,
நிதியியல் உளவறிதல் பிரிவு
இலங்கை மத்திய வங்கி,
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

0112477125 0112477692 fiudnfbp@cbsl.lk www.fiusrilanka.gov.lk